யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 09
## First Term Examination – 2020 – Grade 09

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |

சுட்டெண் Index No

## தமிழ் மொழியும் இலக்கியமும்

பகுதி - I

**பின்வரும் வினாக்களுக்கு மிகப் பெருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. பாலிலே தண்ணீர் கலப்பது பாவம். ''பாவம்'' என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது?
    1. அபாவம் 2. புண்ணியம் 3. பரிதாபம் 4. சாபம்

02. ''அரசே நீங்கள் அப்பிடி கூறுவது தர்மமாகுமா?'' இங்கு தர்மம் என்பதன் எதிர்ப்பதம்?
    1. நீதி 2. அறம் 3. நேர்மை 4. அதர்மம்

03. ஆடு மேய்ப்பவன் இடையன் போல மந்தை மேய்ப்பவன்
    1. பாகன் 2. வலவன் 3. ஆயன் 4. தேவன்

04. பலாவிற்கு மூசு போல பனைக்கு
    1. குரும்பை 2. நுங்கு 3. வடு 4. கச்சல்

05. தென்னைக்கு ஓலை என்பது போல தாழைக்கு
    1. தாள் 2. இலை 3. ஓலை 4. மடல்

06. பின்வருவனவற்றுள் விட்டிசைக்குறி என்பது
    1. ( ) 2. , 3. - 4. :

07. பின்வரும் சொற்கூட்டங்களில் மாறுபட்ட சொற்களை தெரிவு செய்க
    1. இரவி 2. அருணன் 3. பகலவன் 4. சந்திரன்

08. பத்தாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
    1. தகரவிழா 2. பீங்கான் விழா 3. முத்துவிழா 4. மாணிக்கவிழா

09. ''உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப் பொருட்களாக உரல், உலக்கை, அரிதட்டு, சுளகு என்பன வழங்கப்பட்டது.'' இங்கு சீதனம் என்பது.
    1. வரதட்சனை 2. சன்மானம் 3. மானியம் 4. நன்கொடை

10. ''சின்னத்தம்பி வெள்ளை முட்டையை விரும்பிச் சாப்பிட்டான்'' இங்கு வந்துள்ள எழுவாய் அடைமொழிச்சொல்
    1. தம்பி 2. வெள்ளை 34. சின்ன 4. சாப்பிட்டான்

11. பின்வருவனவற்றுள் வந்துள்ள இரட்டைக்கிளவி சொல்லாக அமையாதது
    1. சடசட 2. புறுபுற 3. திடு திடு 4. சில சில

12. “வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும்” என்பதை உணர்த்தும் பழமொழி
    1. கந்தையானாலும் கசக்கி கட்டு
    2. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
    3. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்
    4. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச்சாட்டு

13. ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் தவிர்ந்த பிறரால் வழங்கும் புகழுரை
    1. அணிந்துரை 2. பதவுரை 3. நூலுரை 4. முன்னுரை

14. “இதயம் அழுகிறது” என்ற கவிதையை எழுதியவர்
    1. டாக்டர் எம். எஸ் உதயமூர்த்தி 2. அன்பு முகை தீன்
    3. யோ.பெனடிக் பாலன் 4. வித்துவான் பொன் முத்துக்குமாரன்

15. பொரியலோடு உண்டான். இங்கு பொரியல் என்பது
    1. சினையாகு பெயர் 2. காலவாகு பெயர் 3. தொழிலாகு பெயர் 4. தானியாகு பெயர்

16. கத்தியால் வெட்டினான். இங்கு வந்துள்ள ஆல் உருபு உணர்த்தி நிற்பது
    1. கருவி 2. கருத்தா 3. உடனிகழ்ச்சி 4. கோடற்பொருள்

17. வெற்றிலை நட்டான் என்பதில் இடம்பெற்றுள்ள ஆகு பெயர்
    1. பொருளாகு பெயர் 2. இடவாகு பெயர் 3. சினையாகு பெயர் 4. காலவாகு பெயர்

18. முன்பு + நூறு என்பதை சேர்த்து எழுாதினால்
    1. முந்நூறு 2. முன்நூறு 3. முன்புநூறு 4. முன்னூறு

19. பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க
    1. நான் பல்கலைக்கலகத்திற்கு சென்றேன்
    2. நாள் பல்களைக்கமகத்திற்கு சென்றேன்
    3. நான் பல்கலைக்கழகத்திற்கு சென்றேன்
    4. நான் பல்கழைக்களகத்திற்கு சென்றேன்

20. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கமைக்குக
    அ. வீதிகளில் சந்து பொந்டதுகளிலும் வீடுகளில் எங்கெங்கும் இருட்டு
    ஆ. இப்பொழுது இருள் விலகத் தொடங்கியது
    இ. இருட்டு கவிந்தது எங்கும் இருட்டு
    ஈ. இருட்டைப் போக்குவதற்கு தற்காலிக ஏற்பாடுகளில் மக்கள் முனைந்தனர்
    1. இ, ஈ, அ, ஆ 2. ஈ, ஆ, இ, அ 3. அ, இ, ஆ. ஈ 4. இ, அ, ஈ, ஆ

(20x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி – II
## எல்லா வினாக்களிற்கும் விடை தருக

01. பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை வரைக
   1. நல்ல எண்ணங்களே உயர்வு தரும்
   2. மலைநாட்டுச் சுற்றுலாவின் போது நீர் கண்ட காட்சிகளை வர்ணித்து எழுதுக
   3. சுற்றுச்சூழலைப்பாதுகாப்போம்
   4. வாசிப்பின் முக்கியத்துவம்

(15) புள்ளிகள்)

02. உமது பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி பற்றி நண்பனுக்கு 75 சொற்களில் கடிதம் எழுதுக

(10 புள்ளிகள்)

03. சுருக்கமான விடை தருக.
   1. நல்லெண்ணத்தை தேர்ந்தெடுங்கள் என்ற கட்டுரையில் கட்டுரை ஆசிரியர் தாழ்த்தும் உணர்ச்சிகள் என எவற்றைக் கூறுகின்றார்?
   2. உண்மைக்குப் பரிசு எனும் கதையில் கலீபா அடிக்கடி கூறிக் கொள்ளும் வாக்கியம் எது?
   3. ஒரு சின்னஞ்சிறு பூச்சி எனும் கதையின் ஆசிரியர் யார்? எத்தொகுப்பில் அமைந்துள்ளது?
   4. “இதயம் அழுகிறது” எனும் கவிதையில் ஆசிரியர் கற்பிக்கும்போது மாணவன் அலட்சியமாக இருக்கக் காரணம் என்ன எனக் கூறப்படுகின்றது?
   5. யார் சிறந்தவர் எனும் பாட நூலில் ரோஜாவில் முள் இருப்பதற்கு கனகாம்பரம் கூறும் காரணம் என்ன?
   6. சிவனொளி பாதமலைக்குச் செல்லும் பாதையினூடே ஓடிக் கொண்டிருக்கும் பேராறு யாது?
   7. வேற்றுமை என்றால் என்ன?
   8. அழைப்பிதழின் வகைகள் எவை?
   9. ஆகு பெயர் என்றால் என்ன?
   10. ஊன், ஊண், எனும் இரு சொற்களையும் பொருள் விளங்ககக் கூடிய வகையில் தனித்தனி வாக்கியம் அமைக்குக.

(10 x 3 = 30 புள்ளிகள்)

04. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டது. என எழுதுக.
   1. ‘‘இந்த மல்லிகை மொட்டுக்களைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வை’’
   2. ‘‘உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும் சாப்பிடலாம்’’

(2 x 2½ = 30 புள்ளிகள்)